**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கரூர்.**
**முன்னிலை:- திரு: எம்.சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 கரூர்**

திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 13–ஆம் நாள்,
**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 –ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.188/2025**
**CNR NO. TNKR02-006617-2024**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the court | Judicial Magistrate No.2,Karur. | | |
| 2. | Name of the Judge | Thiru. M. Charles Albert, B.Com., B.L., | | |
| 3. | Date of Judgment | 27.03.2026 | | |
| 4. | Case Number along with CNR Number | CC 188/2025<br>CNR.NO. **TNKR02-006617-2024** | | |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Velliyanai Police Station<br>/Vs/<br>Anantharaj<br>S/o.Balan | | |
| 6. | Date of Occurrence | 25.09.2022 | | |
| 7. | Date of Complaint | 25.09.2022 | | |
| 8. | Date of Arrest if any and Remand | Nil | | |
| 9. | Period of remand of the accused | Nil | | |
| 10. | Date of Release on bail | 17.10.2022<br>(As per order of Hon'ble Principal District and Sessions Court, Karur in Crl.M.P.No.1870/2022 Dt.15.10.2022 which was filed u/s.438 of Cr.P.C) | | |
| 11. | Date of Final report | 27.03.2025 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused 263 of BNSS | 03.12.2025 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW 1 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW 2 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW 3 | 24.03.2026 | 24.03.2026 |

<table>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code</td><td>
<table>
<tr><th>Party</th><th>Nature of Petition</th><th>Registered date</th><th>Crl.M.P. No.</th><th>Allowed / Dismissed</th></tr>
<tr><td>Accused</td><td>Petition filed u/s.359 of BNSS</td><td>24.03.2026</td><td>1/2026</td><td>Partially allowed on 24.03.2026</td></tr>
<tr><td>Prosecution</td><td>Petition filed u/s.348 of BNSS</td><td>24.03.2026</td><td>2/2026</td><td>Allowed on 24.03.2026</td></tr>
<tr><td>Prosecution</td><td>Petition filed u/s.330 of BNSS</td><td>24.03.2026</td><td>3/2026</td><td>Allowed on 24.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>16</td><td>Date of examination of the accused U/s. 351 of the Sanhita</td><td>26.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>03.02.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of closure of Trial</td><td>26.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence or order</td><td>27.03.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of service of copy of judgment to the accused</td><td>Nil</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give explanation</td><td>No</td></tr>
</table>

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>வெள்ளியணை காவல் நிலையம்,<br>கா. நி. கு. எண்.284/2022 |
| எதிரியின் பெயர் | ஆனந்தராஜ்,<br>த/பெ. பாலன்,<br>செல்வம் நகர்,<br>பாகநத்தம்,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(2) of IPC |
| நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 324, 506(2) of IPC |
| எதிரியின் பதில் | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி இல்லை |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | செல்வி R. முருகேஸ்வரி, B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.P.கோபிநாத், B.Sc., B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 26.03.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 27.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 27.03.2025 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 26.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக செல்வி R. முருகேஸ்வரி, அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை– 2 கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக திரு.P.கோபிநாத், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 27.03.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 25.09.2022 ந் தேதி மாலை 06.45 மணிக்கு இவ்வழக்கின் எதிரி ஆனந்தராஜ் என்பவர் புகார்தாரரின் வீட்டிற்கு சென்று புகார்தாரரின் வீட்டிற்கு வெளியில் நின்றிருந்த புகார்தாரரின் அம்மாவிடம் கேட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த புகார்தாரர் வசந்தகுமார் எதிரியிடம் ஆடு செடியை கடித்ததற்கு நான் தானே பேசினேன் எதுக்கு நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எனது அம்மாவிடம் வந்து பிரச்சனை செய்யுற என்று சொல்லிக்

கொண்டிருந்த போதே எதிரி ஆனந்தராஜ் புகார்தாரரைப் பார்த்து அப்படி தான்டா ஆட்டை விட்டு செடிகளை கடிக்க விடுவேன் உன்னால் என்னடா பன்ன முடியும் தேவடியா பயலே என்று கெட்ட வார்த்தையால் திட்டி எதிரி அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் தலையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் அப்போது சாட்சிகள் ஓடிவரவே எதிரி அங்கிருந்து செல்லும் புகார்தாரரைப் பார்த்து அரிவாளைக் காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னை வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்ததாகவும், எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வெள்ளியணை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 284/2022ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக C.C.No. 188/2025 ஆக எடுக்கப்பட்டுள்ளது.

2) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும், பா.நா.சு.ச. 230–ஆவது பிரிவின் படி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரியிடம் அவர் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) –ன் படியான குற்றசாராம்சம் குறித்து எடுத்துரைத்து, குற்றச்சாட்டு வனைந்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி, பொய் வழக்கு என்று கூறினார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரின் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ. 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் எதிரி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை.

<u>5)</u> <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1 வசந்தகுமார்** தன் சாட்சியத்தில், " நான் தற்போது பாகநத்தம் செல்வம் நகரில் குடியிருந்து மெக்கானிக்கல் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர் ஆவார். கடந்த 3 வருடத்திற்கு முன்னால் 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் குச்சியால் என்னை அடித்ததில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது அதற்காக நான் கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரயை செய்யவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2 சத்தியமூர்த்தி** தன் சாட்சியத்தில் " நான் தற்போது செல்வம் அவன் பிளாஸ்ட் பைப் கம்பெனியில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊரை சேர்ந்தவர். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை." என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3 திரு.மனோகரன்** தன் சாட்சியத்தில் " கடந்த 26.09.2022ம் தேதி வெள்ளியணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சத்தியபிரியா பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்திலிருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வசந்தகுமார் என்பவரிடமிருந்து பெற்று வந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.284/2022, ச.பி.294(பி),324,506(2) இ.த.ச படி வழக்கு பதிவு செய்துள்ளார், அன்றைய தினம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 1.15 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார், தொடர்ந்து 1 முதல் 5 வரை சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் எதிரி, கரூர் அமர்வு நீதிமன்றத்தில் பிணையம் பெற்று சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை, பின்னர் வசந்தகுமாருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து அந்த மருத்துவமனை மருத்துவரின் கருத்துரைப்பெற்று வசந்தகுமாருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் பூங்குழலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார், பின்னர் வசந்தகுமாருக்கு மேல்சிகிச்சையளித்து விபத்து பதிவேடுடன் கூடிய மருத்துவகருத்துரை வழங்கிய திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் பிரபு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார், இத்துடன் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**6)** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து பா.நா.சு.ச.351(1)(ஆ)–ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**7)** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) –ன் படியான குற்றங்களை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

9) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

கடந்த 25.09.2022ந் தேதி மாலை 06.45 மணிக்கு இவ்வழக்கின் எதிரி ஆனந்தராஜ் என்பவர் புகார்தாரரின் வீட்டிற்கு சென்று புகார்தாரரின் வீட்டிற்கு வெளியில் நின்றிருந்த புகார்தாரரின் அம்மாவிடம் கேட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த புகார்தாரர் வசந்தகுமார் எதிரியிடம் ஆடு செடியை கடித்ததற்கு நான் தானே பேசினேன் எதுக்கு நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எனது அம்மாவிடம் வந்து பிரச்சனை செய்யுற என்று சொல்லிக் கொண்டிருந்த போதே எதிரி ஆனந்தராஜ் புகார்தாரரைப் பார்த்து அப்படி தான்டா ஆட்டை விட்டு செடிகளை கடிக்க விடுவேன் உன்னால் என்னடா பன்ன முடியும் தேவடியா பயலே என்று கெட்ட வார்த்தையால் திட்டி எதிரி அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் தலையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் அப்போது சாட்சிகள் ஓடிவரவே எதிரி அங்கிருந்து செல்லும் புகார்தாரரைப் பார்த்து அரிவாளைக் காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னை வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்ததாகவும், எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற எண். 284/2022– ல் எதிரியின் மீது தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிக்கை பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் அ.சா.1 நிகழ்வுநிலை புகார்தாரர் ஆவார். அ.சா.2 நேரடி சாட்சி ஆவார். மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3 இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் " ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர் ஆவார். கடந்த 3 வருடத்திற்கு முன்னால் 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் குச்சியால் என்னை அடித்ததில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது அதற்காக நான் கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை" என்று சாட்சியமளித்துள்ளார்.

12) இவ்வழக்கின் நேரடி சாட்சியான அ.சா.2 தனது முதல் விசாரணையில் " ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊரை சேர்ந்தவர். என்ன

சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை" என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.3 மனோகரன், இவ்வழக்கு சம்மந்தமாக சத்தியபிரியா, உதவி ஆய்வாளர்கள் மேற்கொண்ட புலன்விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தை ஆராயும் போது, எதிரி, புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், புகார்தாரரை அரிவாளால் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் குறிப்பிட்டு யாதொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

15) மேலும், அ.சா.1 புகார்தாரரின் வாக்குமூலத்தில் எதிரி அங்கிருந்த அருவாளால் தனது தலையில் வெட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழை ஆராய்கையில், சொற்பகாயம் என்று குறிப்பிட்டிருந்தது. மேலும், இந்த வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் அருவாள் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

16) இந்நிலையில், புகார்தாரர் மற்றும் எதிரி இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தங்களுக்குள்ளான பிரச்சனை சம்மந்தமாக சமரசமாக சென்றுவிட்டனர் என பா.நா.சு.ச. 359–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17) அவ்வாறு சாதாரண காயம் ஏற்பட்டதாக அறிந்தாலும், அது எதிரியால் தான் ஏற்படுத்தப்பட்டது பற்றி புகார்தாரர் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், சாட்சிய, சான்றாவணங்களை ஆராயும் போதும், பா.நா.சு.ச.–359–ன் படியான சமசர மனுவை பரிசீலனை செய்யும் போதும், புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்பட்டது என்பது தெரியவருகின்றது.

18) மேற்கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து எதிரியின் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(Part II)–ன் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது. ஆனால் இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வுகாண்கின்றது. இருந்த போதிலும், இ.த.ச. பிரிவு 323–ன் கீழான தண்டனை இ.த.ச பிரிவு 324–ன் கீழான தண்டனையை விட குறைவு என்பதால் கூடுதல் விசாரணை மேற்கொள்ளவில்லை.

19) மேலும், அ.சா.3ன் சாட்சியம், புலன் விசாரணை குறித்து ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் விளக்குவதாக அமைந்துள்ளது. அ.சா.3 இவ்வழக்கு சம்பவத்தினை நேரில் கண்ட கண்ணுற்று சாட்சியல்ல. எனவே, எதிரிக்கு எதிரான அ.சா.3–ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக வைத்து இவ்வழக்கினை தீர்மானித்திட முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவராகிறார் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**20)** முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(Part II)–ன் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்தும், இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றத்தை பொறுத்து பா.நா.சு.ச. பிரிவு 359(8) ன் படியும், எதிரியை பா.நா.சு.ச. 271(1)–ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**21)** இவ்வழக்கின் எதிரி 17.10.2022–ம் நீதிமன்ற முன்பிணையில் சென்றுள்ளார். எதிரி பிணையில் செல்லும்போது, ஏற்படுத்திய பிணை ஆவணம் இத்தீர்ப்பிற்கு பிறகு 2 மாதங்கள் கழித்து இரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

**22)** மேலும், இந்த வழக்கில் வழக்கு சொத்தாக தாக்கல் செய்யப்பட்டு ஆர்.பி.எண்.112/2022 ல் கண்டுள்ள அருவாள் ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 27.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.03.27 17:28:11 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா.1. | வசந்தகுமார் |
| அ.சா.2. | சத்தியமூர்த்தி |
| அ.சா.3. | திரு.மனோகரன், காவல்நிலைய உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு |

| | |
|---|---|
| அ.சா.ஆ.8 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை |
| அ.சா.ஆ.10 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பில் சான்று பொருள் :–</u>**

அ.சா.பொ.1– அரிவாள்

**<u>எதிரி தரப்பில் சாட்சி, சான்று பொருள் :–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பில் சான்றாவணங்கள்:–</u>**

இல்லை

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.03.27 17:27:56 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**கரூர்.**

**<u>குறிப்பு</u>**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2) எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப் படவில்லை.
3) வழக்கின் முடிவு slip proceeding காவல் துறையினருக்கு கொடுக்க உத்தரவிடப்பட்டது.